


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351






### ‘சிஏபிஎ·ஃப் பணிக்கான தேர்வு ; மாநில மொழிகளில் எழுதலாம்’

# தாராளம்

## மத்திய ஆயுதக் காவல் படை காவலர்களுக்கான தேர்வு இந்தி, ஆங்கிலம் தவிர இனி 13 மாநில மொழிகளிலும் நடத்தப்படும் மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிப்பு : முதல்வர் ஸ்டாலின் வரவேற்பு



புதுடெல்லி, ஏப். 16 –

மத்திய ஆயுதக் காவல் படை (சிஏபிஎ·ஃப்) காவலர்களுக்கான தேர்வு இந்தி, ஆங்கிலம் தவிர இனி 13 மாநில மொழிகளிலும் நடத்தப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது. இந்தப் புதிய நடைமுறை அடுத்த ஆண்டு ஜனவரி 1-ம் தேதி முதல் அமல்படுத்தப்படும்.

இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகம் சனிக்கிழமை நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "மத்திய ஆயுதப் படையில் உள்ளூர் இளைஞர்களின் பங்களிப்பை அதிகப்படுத்துவதற்கும், மாநில மொழிகளை ஊக்குவிப்பதற்காகவும் உள்துறை அமைச்சர் அமித் ஷா இந்த முடிவை எடுத்துள்ளார். இனி மத்திய ஆயுதப் படை காவலர் தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் இந்தி, ஆங்கிலம் தவிர அசாமி, பெங்காலி, குஜராத்தி, மராத்தி, மலையாளம், கன்னடம், தமிழ், தெலுங்கு, ஒடியா, உருது, பஞ்சாபி, மணிப்பூரி, மற்றும் கொங்கனி ஆகிய மொழிகளிலும் அமைக்கப்படும். இந்த முடிவின் மூலமாக லட்சக்கணக்கான தேர்வர்கள் தங்களின் தாய்மொழியில் தேர்வெழுதுவதுடன் தங்களுக்கான தேர்வு வாய்ப்புகளை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

மாநில மொழிகளில் தேர்வுகளை நடத்துவதற்கு வசதியாக மத்திய உள்துறை அமைச்சகமும் பணியாளர்கள் தேர்வு வாரியமும் இணைந்து புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளது. இந்தப் புதிய வாய்ப்பினை பயன்படுத்தி உள்ளூர் இளைஞர்கள் மத்திய பணிகளில் சேர்வதற்காக மாநில, யூனியன் பிரதேச அரசுகள் பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக முதல்வர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "கடந்த வாரம், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு நான் எழுதியிருந்த கடிதத்தின் விளைவாக, மத்திய ஆயுதக் காவல் படை (CAPF) காவலர் தேர்வுகள் அனைத்து மாநில மொழிகளிலும் நடத்தப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்திருக்கிறது.

ஒன்றிய அரசின் இந்த முடிவை மனதார வரவேற்கும் அதேவேளையில், ஒன்றிய அரசால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளிலும் தமிழ் உள்ளிட்ட அனைத்து மாநில மொழிகளிலும் வினாத்தாள்கள் வழங்கப்பட வேண்டும் என்கிற நமது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறேன்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

தெலங்கானா மாநில நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.டி. ராமாராவ், ஏப்.7-ம்தேதி வெளியிட்டுள்ள தனது ட்விட்டர் பதிவில், இந்தத் தேர்வுகளை தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மாநில மொழிகளில் நடத்தும்படி மத்திய உள்துறை அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். மேலும் அவர் தனது பதிவில், "இதுபோன்ற போட்டித் தேர்வுகள் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் மட்டும் நடத்தப்படுவது, ஆங்கில வழியில் பயிலாத அல்லது இந்தி மொழி பேசும் மாநிலங்களைச் சேராத பிற மாநில இளைஞர்களுக்கு பெரும் பின்னடைவாக இருக்கிறது” என்று தெரிவித்திருந்தார்.

சிஏபிஎஃப் எனப்படும் மத்திய ஆயுத காவல் படை என்பது மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎஃப்), எல்லைப் பாதுகாப்பு படை (பிஎஸ்எஃப்), இந்தே-திபெத்தியன் எல்லைக் காவல் (ஐடிபிபி), சாஸ்த்ரா சீமா பால் (எஸ்எஸ்பி), மத்திய தொழில் பாதுகாப்பு படை (சிஐஎஸ்எஃப்) மற்றும் அசாம் ரைஃபில்ஸ் ஆகியவற்றை உள்ளடக்கியது. சிஏபிஎஃப் தேர்வுகள் மத்திய காவல் படைக்கு ஆட்களை தேர்வு செய்யும் தேர்வு மையத்தால் நடத்தப்படுகிறது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய முடிவால் மாநில மொழிகளில் பயின்ற பல இளைஞர்கள் பங்கேற்கவும் அவர்களின் திறமைகளை நிரூபிக்கவும் வழிவகுக்கும் என்பது கவனிக்கத்தக்கது.

## திமுக தொகுதி பார்வையாளர்களின் கலந்தாலோசனைக் கூட்டத்தில் நிர்வாகிகளுக்கு ஸ்டாலின் அறிவுரை



சென்னை, ஏப். 16 –

திமுக தொகுதி பார்வையாளர்களின் கலந்தாலோசனைக் கூட்டம், அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

திமுகவில் புதிதாக 1 கோடி உறுப்பினர்களைச் சேர்ப்பது தொடர்பாகவும், நாடாளுமன்ற தேர்தலுக்கான பூத் கமிட்டி அமைப்பது தொடர்பான பணிகளை கண்காணிக்கவும் 234 தொகுதிகளுக்கும் புதிதாக பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இளைஞர் அணி, மாணவர் அணி உள்ளிட்ட பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தொகுதி பார்வையாளர்களின் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே உள்ள நிலையில், உறுப்பினர் சேர்க்கை மற்றும் பூத் கமிட்டி அமைப்பதற்கான தொகுதி பார்வையாளர்களுடன் இன்றைய சந்திப்பில் முக்கிய கருத்துகளைப் பகிர்ந்துகொண்டோம். 2 கோடி உறுப்பினர் என்ற நம் இலக்கை விரைந்து அடைய அவர்களுக்கு ஊக்கமளித்தேன்" என்று அதில் கூறியுள்ளார்.

### பொன்னமராவதியில் 100 பயனாளிகளுக்கு ரூ.1.35 கோடி மதிப்பீட்டில்

## அரசு நலத்திட்ட உதவிகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்



**பொன்னமராவதி, ஏப். 16–**

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வர்த்தக மஹாலில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ். ரகுபதி அவர்கள் நேற்று வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி தலைமையில் நடைபெற்றது. பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்ற மக்கள்நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி இன்றையதினம் பொன்னமராவதியில் 57 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களும், 31 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், 5 பயனாளிகளுக்கு பட்டாமாறுதலும் (முழுப்புலம்), 7 பயனாளிகளுக்கு பட்டாமாறுதலும் (உட்பிரிவு) என ஆகமொத்தம் 100 பயனாளிகளுக்கு ரூ.1,34,95,350 மதிப்புடைய அரசுநலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிட அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். பொதுமக்களின் தேவையறிந்து திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் வாழ்வாதாரம் உயர்வதற்கு வழிவகை ஏற்படுகிறது. மேலும் பொன்னமராவதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பொன்னமராவதி ஒன்றியக்குழுத்தலைவர் சுதா அடைக்கலமணி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், பேரூராட்சி துணைத் தலைவர் வெங்கடேசன், வட்டாட்சியர் பிரகாஷ், பேரூராட்சி செயல் அலுவலர் கணேசன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முத்து, தொட்டியம்பட்டி ஊராட்சிமன்றத்தலைவர் கீதா சோலையப்பன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## திமுகவிடம் தொடர்ந்து கேள்வி எழுப்புவோம் பதில் அளிக்க வேண்டும் – குறிவைக்கும் அண்ணாமலை

சென்னை, ஏப். 16 –

திமுகவின் சொத்து மதிப்பு விவரங்களை வெளியிட்ட பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, தொடர்ந்து எழுப்பப்படும் கேள்விகளுக்கு திமுக பதிலளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

திமுக ஆட்சி அமைந்த பிறகு பாஜக - திமுக இடையேயான கருத்து மோதல் அதிகரித்துள்ளது. தமிழக அரசின் பல துறைகள் மீது அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளை அண்ணாமலை முன்வைத்து வந்தார். இந்நிலையில், அண்ணாமலையின் வாட்ச் விவகாரம் சூடு பிடிக்க தொடங்கியது. அண்ணாமலை கையில் கட்டியிருப்பது வெளிநாட்டு வாட்ச் என்றும், அது பல லட்சம் மதிப்புடையது என்றும் திமுகவினர் விமர்சித்தனர். ஆனால், அது வெளிநாட்டு வாட்ச் அல்ல, ரஃபேல் விமானத்தின் உதிரி பாகங்களால் தயாரிக்கப்பட்ட வாட்ச் என அண்ணாமலை தெரிவித்திருந்தார்.

அதைத்தொடர்ந்து, இந்த வாட்ச் வாங்கியதற்கான ரசீதை அண்ணாமலை வெளியிட வேண்டும் என திமுக அமைச்சர் செந்தில் பாலாஜி கூறியிருந்தார். இதனை தொடர்ந்து அண்ணாமலை நேற்று சென்னையில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் ரபேல் வாட்ச் வாங்கியதற்கான விவரங்களை வெளியிட்டார். மேலும், திமுக மூத்த தலைவர்களின் சொத்து பட்டியல் என்ற பெயரில் பல ஆவணங்களையும் வெளியிட்டார்.

ஏப்ரல் 14 ஆம் தினமான நேற்று, நான் அணிந்திருக்கும் கைக்கடிகாரத்தின் ரசீது, எனது வங்கிக் கணக்கு, கிரெடிட் கார்டு மற்றும் கல்விக் கடன் விவரங்களுடன் திமுகவினரால் குவிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரங்களையும் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிட்டிருந்தேன்.



(1/6)

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், ஏப்ரல் 14 ஆம் தினமான நேற்று, நான் அணிந்திருக்கும் கைக்கடிகாரத்தின் ரசீது, எனது வங்கிக் கணக்கு, கிரெடிட் கார்டு மற்றும் கல்விக் கடன் விவரங்களுடன் திமுகவினரால் குவிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரங்களையும் பொதுமக்கள் பார்வைக்காக வெளியிட்டிருந்தேன்.

அவற்றின் விவரங்கள் *https://enmannenmakkal.com* என்கிற இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளன. வங்கி பரிவர்த்தனைகளின் மூலமாக எனது நண்பர்களின் விவரங்களும் பொதுவெளியில் வெளியானதால், அது அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பாதித்துள்ளது என்பதையும் நான் புரிந்து கொள்கிறேன் என பதிவிட்டிருந்தார்.

மேலும், திமுகவின் மக்கள் பிரதிநிதிகள் தங்கள் வங்கிக் கணக்கு விவரங்களை பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர்கள் மக்களால், மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற பொறுப்பை இனியாவது உணர வேண்டும். எனவே, இன்று முதல், திமுகவிடம் தொடர்ந்து கேள்விகள் எழுப்புவோம். மக்களுக்கான எங்கள் கேள்விகளுக்கு உரிய பதில்களையும் திமுகவிடமிருந்து எதிர்பார்க்கிறோம் என குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தினர் கருப்பு உடை அணிந்து ஆர்ப்பாட்டம்

மயிலாடுதுறை, ஏப். 16 –

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் கவிதா தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கருப்பு உடை அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



தொடர்ந்து சத்துணவு ஊழியர்கள் மூலமாக காலை சிற்றுண்டி உணவு திட்டத்தை வழங்கிட வேண்டும், திமுக தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தது போல் மாதாந்திர ஓய்வூதியம் 6750 அகவிலை படியுடன் வழங்க வேண்டும், ஓய்வு பெறும் வயதை 60 இல் இருந்து 62 ஆக உயர்த்த வேண்டும், சத்துணவு பணியாளரின் ஆண் வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வேண்டும் உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

# இன்று

16-4-2023

சர்வ ஏகாதசி · சுபமுகூர்த்தம்

சக வருடம் 1945 சைத்ரம் 26

| சோபகிருது சித்திரை 3 | APR - SUN ஞாயிறு | ரமலான் 24 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 106 / 259 | |

தேய். ஏகாதசி 28.20 (மா. 05.23) சதயம் 53.13 (கா. 03.20) தியாஜ் 13.53 அகஸ் 30.34 சித்த. சர்வ ஏகாதசி. சுபமுகூர்த்தம். உலோ ஸண்டே. திருச்செங்காட்டங்குடி உத்திராபதீஸ்வரர் உற்சவாரம்பம். சமயபுரம் மாரியம்மன் மரக்குதிரை வாகனத்தில் பவனி. சிறிய நகக.

| | நல்லநேரம் | கௌ.நு.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 1.30-2.30 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.30-4.30 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு · பரிகாரம் : வெல்லம் · மேஷ லக்கனம் இருப்பு நா. 3 வி. 58 · சந்திராஷ்டமம் பூரம்

கரணம் : 10.30-12 · சூரிய உதயம் : 6.03

கட்ட மன்னும் பச்சை மன்னும் ஒட்டாது

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | நற்செய்தி |
| ரிஷபம் | போட்டி |
| மிதுனம் | சுகம் |
| கடகம் | ஆதரவு |
| சிம்மம் | அமைதி |
| கன்னி | புகழ் |
| துலாம் | சினம் |
| விருச்சி | அச்சம் |
| தனுசு | நன்மை |
| மகரம் | வெற்றி |
| கும்பம் | தனம் |
| மீனம் | சுகம் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"உனது வாழ்க்கைக்கு ஒரு எல்லை அமைத்து வாழ் ஆனால் எல்லைக்குள் ஒருபோதும் வாழ்க்கையை அமைத்து விடாதே"

புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,720 | Rs. 6,184 |


# நெடுவாசலில் பொண்ணா குடும்ப உறவுகள் மூதாதையர் வழிபாடு




ஆலங்குடி ,ஏப்.16–

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, நெடுவாசல் கீழ்பாதி கிராமத்தில் சுமார் 100 க்கும் மேற்பட்ட "பொண்ணா குடும்ப உறவுகள்" தங்களது ஏழு தலைமுறை மூதாதையர்களை நினைவு கூர்ந்து வணங்கி கூட்டுக் குலதெய்வ வழிபாட்டை நெடுவாசல் கிராமத்தின் காவல் தெய்வமான அய்யனார் கோவிலில் ஒன்று கூடி புதுமையாக சிறப்பாக கொண்டாடினர்.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான மரக்கன்றுகளை கோவிலின் நாற்புறமும் நட்டு, கோயிலை சுத்தம் செய்து, புரனமைத்து, வர்ணம் தீட்டி, மாவிளக்கு போட்டு, மொட்டை அடித்து,கூடிக் குளுமி ஒவ்வொருவரும் தங்களை அறிமுகம் செய்து கொண்டு கறி விருந்து செய்து ஒன்று கூடி மூதாதையர்கள் நினைவுகளை பகிர்ந்து கொண்டாடினர்.உறவுகள் தூரம் ஆகி இருக்கிற இந்த நவீன கால யுகத்தில் சென்னை போன்ற பெருநகரங்களுக்கு புலம்பெயர்ந்த அனைவரும் தனது கிராமத்திற்கு வந்திருந்து ஒன்று கூட கொண்டாடி பெரு மகிழ்ச்சியடைந்தனர்.

# விண்வெளியில் விளைவிக்கப்பட்ட தக்காளி பூமிக்கு வருகிறது நாசா அறிவிப்பு



வாஷிங்டன் ,ஏப்.16–

விண்வெளியில் விளைவிக்கப்பட்ட தக்காளி பிரத்யேக விண்கலம் மூலம் பூமிக்கு கொண்டுவரப்படுவதாக அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா தெரிவித்துள்ளது. இது இன்று பூமியை அடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகள் விண்வெளியில் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தும் நோக்கில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. பிற கிரகங்களில் மனிதர்கள் வாழும் சாத்தியக்கூறுகள் தொடங்கி அந்த கோள்களில் நீர் உள்ளதா என்பது வரையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை குடியேற்றும் ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகிறது.

இந்த சூழலில் விண்வெளியில் விளைவிக்கப்பட்ட தக்காளி பூமிக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த ஆண்டு நிலவில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரியை கொண்டு செடியை வளர்த்து அசத்தி இருந்தனர் விஞ்ஞானிகள். நாசா மற்றும் புளோரிடா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டனர். இந்த நிலையில் தற்போது விண்வெளியில் தக்காளி விளைவிக்கப்பட்டுள்ளது. உலக மக்கள் பெரும்பாலானோர் தக்காளியை தங்கள் உணவில் சேர்த்து கொள்கிறார்கள். சமைக்காமல்பச்சையாகவும், சமைத்தும், சாஸ் (Sauce) என பல வகையில் நம் உணவில் தக்காளி இடம்பெற்றுள்ளது.

விண்வெளியில் ஆராய்ச்சிரீதியாகதக்காளி விளைவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் அமைக்கப்பட்ட மினியேச்சர் கிரீன்ஹவுஸ் ஆய்வுக் கூடம் ஒன்றில் விஞ்ஞானிகள் தக்காளியை விடுவித்துள்ளனர். இது குட்டை ரக தக்காளி என நாசா தெரிவித்துள்ளது. சுமார் 100 நாட்களுக்கு மேல் தக்காளி அங்கு பயிர் செய்யப்பட்டுள்ளது. முறையே 90, 97 மற்றும் 104-வது நாட்களில் தக்காளி அறுவடை செய்யபடுள்ளது. அதை பதப்படுத்தி அதன் ஊட்டச்சத்து சார்ந்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இது எதிர்வரும் காலத்தில் நீண்ட கால விண்வெளி பயணத்தின் போது ப்ரெஷ் உணவு பெற உதவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வு என நாசா தெரிவித்துள்ளது.

ஜப்பான் விண்வெளி ஆய்வு முகமை சார்பில் விண்வெளியில் தயாரித்த கிரிசடல்களும் அடங்கும் என தெரிகிறது. இந்த விண்கலம் பூமியை அடைந்ததும் புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்திற்கு கொண்டு வரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437



மதுரை வடக்கு மாவட்டம் கிழக்கு ஒன்றியம் சார்பாக தனியார் திருமண மஹாலில் செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சரும் மதுரை மாவட்ட திமுக செயலாளர் பி.மூர்த்தி சிறப்புரை ஆற்றினார் மற்றும் இலக்கிய அணி துணை செயலாளர் போஸ் மற்றும் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் .வெங்கடேசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ரகுபதி, அவைத்தலைவர் ஆனந்த் தலைமை வகித்தனர், மேலும் துணைச் செயலாளர் வினோத் முத்தையா, எம். ஆர், ராஜ்குமார், மாவட்ட பிரதிநிதி போஸ், ஒன்றிய கவுன்சிலர் முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர், மேலும் திமுக கட்சி உறுப்பினர்கள்,செயலாளர்கள், திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.3.25 லட்சம் வாடகை, ரூ.3 லட்சம் வாட்ச் அண்ணாமலையிடம் விசாரணை நடத்த வேண்டும் கே.எஸ்.அழகிரி



சென்னை ,ஏப்.16–

"பாஜக தலைவர் அண்ணாமலை மாதம் ஒன்றுக்கு மூன்றே முக்கால் லட்சம் வீட்டு வாடகைஎப்படிகொடுக்க முடிகிறது? மூன்று லட்ச ரூபாய் கை கடிகாரமும் எப்படி அணிய முடிகிறது? இதற்கு யார் பணம் கொடுக்கிறார்கள்? இதுகுறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கே.எஸ்.அழகிரி கூறியுள்ளார்.

இதுதொடர்பாகஅவர் தனதுட்விட்டர்பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "50 ஆண்டுகால பொது வாழ்க்கையில் இருமுறை சட்டமன்ற உறுப்பினராக, ஒருமுறை மக்களவை உறுப்பினராக இருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருக்கும் நான், நந்தனத்தில் உள்ள தமிழ்நாடு அரசு அடுக்குமாடி குடியிருப்பில் ரூபாய் 16,000 வாடகைக்கு குடியிருக்கிறேன். ஒரு வருடமாக வாடகை கட்டவில்லை என்று நோட்டீஸ் பெறுகிற நிலையில் இருக்கிறேன்.

நான்கு ஆடுகளை மட்டுமே வைத்திருந்ததாக கூறிய பாஜக தலைவர் அண்ணாமலை மாதம் ஒன்றுக்கு மூன்றே முக்கால் லட்சம் வீட்டு வாடகைஎப்படிகொடுக்க முடிகிறது? மூன்று லட்ச ரூபாய் கை கடிகாரமும் எப்படி அணிய முடிகிறது? இதற்கு யார் பணம் கொடுக்கிறார்கள்? இதுகுறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, சென்னையில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் திமுகவினரின் சொத்துப் பட்டியல் என்றும், தனது ரபேல் வாட்ச் தொடர்பான விவரங்கள் என்றும் சில தகவல்களை www.enmannenmakkal.com என்ற இணையதளத்தில் அண்ணாமலை நேற்று வெளியிட்டார். அப்போது பேசிய அவர், மாநிலத் தலைவராக எனக்கு மாதத்துக்கு ரூ.8 லட்சம் செலவாகிறது. நண்பர்கள், கட்சியின் உதவியால்தான் இவற்றைச் சமாளிக்க முடிகிறது. காருக்கு டீசல், உதவியாளர்கள் ஊதியம், வீட்டு வாடகைஎன அனைத்தையும் மற்றவர்கள்தான் கொடுக்கிறார்கள்.

நான் கட்டியிருக்கும் ரபேல் வாட்ச் 'பெல் அண்ட் ரோஸ்' என்ற நிறுவனம், ரபேல் விமானத்தை தயாரித்த பிரெஞ்சு நிறுவனத்துடன் சேர்த்து தயாரித்தது. உலகில் மொத்தமே 500 ரபேல் வாட்ச்-கள்தான் உள்ளன. நான் கட்டியிருப்பது 147-வது வாட்ச். இந்தியாவில் 2 ரபேல் வாட்ச்-கள் மட்டும்தான் விற்றுள்ளன. இதில் ஒன்றை மும்பையைச் சேர்ந்த ஒருவர் வைத்துள்ளார்" என்று கூறியிருந்தார்.

# தென்காசி மாவட்டம் செங்கோட்டை ரயில் நிலையம் முன்பாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினர் ரயில் மறியல் போராட்டம்



தென்காசி,ஏப்.16–

தென்காசி மாவட்டம் செங்கோட்டை ரயில் நிலையம் முன்பாக இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்ட தலைவரும், தென்காசி சட்டமன்ற உறுப்பினருமான பழனி நாடார் தலைமையில் தேசிய தலைவர் வயநாடு எம்.பி ராகுல் காந்தியின் தகுதி நீக்கம் செய்ததை கண்டித்தும், மத்திய அரசு பங்களாவை காலி செய்ததை கண்டித்தும் செங்கோட்டை ரயில் நிலையம் முன்பாக காங்கிரஸ்கட்சியினர்ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில்காவல்துறைக்கும் காங்கிரஸ்கட்சியினருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது மத்திய பிஜேபி அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன மேலும் போராட்டத்தில்ஈடுபட்ட காங்கிரஸ் கட்சியினர் பெண்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்ச்சியில் தலைமை பழனி நாடார், சட்டநாதன் சங்கை கணேசன், உதய கிருஷ்ணன், மாடசாமி ஜோதிடர், முகமது ரபி, ராஜசேகர்,தாயார்தோப்பு ராமர், பிரேம்குமார், ஏ பி வி மகேந்திரன், கடையநல்லூர் மாடசாமி, ரவி, எஸ் எம் மஸ்தான், சுரேஷ் ,எஸ் சி, எஸ் டி, பிரிவு மாவட்டத்தலைவர் ராமச்சந்திரன், இளைஞர் காங்கிரஸ் மணிகண்டன், முத்துக்குமார், ஈஸ்வரன், சின்னராஜா, பெரியசாமி, விஏஜி சிங்கக்குட்டி, ஆலங்குளம் கோடீஸ்வரன், ஜெகன், செங்கோட்டை இலக்கிய அணி ராஜீவ் காந்தி உள்பட அனைவரும்கைது செய்யப்பட்டனர்,



புதுவை மாநிலம் காரைக்கால் மாவட்டம் கால்நடை பராமரிப்பு துறை மூலமாக நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட கோட்டுச்சேரி கொம்யூன் வரிச்சக்குடியில் உள்ள பயணாளிகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக கால்நடைகள் மற்றும் கோழிகள் வளர்ப்பு கண்காட்சி நடைபெற்றது, இந்த கண்காட்சியில் சிறந்து விளங்கிய பயனாளிகளுக்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் பயனாளிகளுக்கு பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினார்கள்.இந்நிகழ்வில் இணை இயக்குனர் கோபிநாத், மதுத்துவர் கிருத்திகா மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். இந்த கண்காட்சியில் 162 மாடுகளும் மற்றும் 76 கோழிகளும் கண்காட்சியில் கலந்து கொண்டன. இக்கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் பரிசுகளை வழங்கினார்.

# தென்காசி மாவட்டம் புளியங்குடியில் அம்பேத்கரின் பிறந்தநாளையொட்டி அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை



தென்காசி,ஏப்.16–

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரின் 133-வது பிறந்தநாள் விழாவில் சங்கரன்கோவில் எம்எல்ஏவும் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான, ராசா ஈஸ்வரன் தலைமையில் புளியங்குடி நகர திமுக செயலாளர் அந்தோணிசாமி, நகர் மன்றத் தலைவர் விஜயா சௌந்தரபாண்டியன் முன்னிலையில் புளியங்குடி நகர திமுக அலுவலகத்தில் வைத்து அம்பேத்கரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி சீனிவாசன், மாவட்ட பொருளாளர் சரவணன், சங்கரன்கோவில் சேர்மன் உமாமகேஸ்வரிசரவணன், நகர அவைத் தலைவர் வேலுச்சாமி பாண்டியன், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, அருணாச்சலம், ராசா ராசன், விக்ரம் மணிகண்டன், பெருமாள் மாரிச்செல்வம், சிஎம்ஏ ஜெகதீஷ், அண்ணாமலை, உமா மகேஸ்வரி, கார்த்திகா மகேஷ், பொன்னுதுரைச்சி, தலைமைக் திமுக பேச்சாளர் ஜப்பார், சேக்மைதீன், பீர் ஒலி, மைதீன், நாகூர் மீரான், ஞானபண்டிதன், சதீஷ் ஆகியோர்கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# புதுக்கோட்டை காந்தி நகர் பகுதியில் சட்ட மாமேதை அம்பேத்கரின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்



**புதுக்கோட்டை, ஏப்.16–**

புதுக்கோட்டை காந்தி நகர் பகுதியில் புரட்சியாளர் அம்பேத்கரின் 133-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரண பொருட்களும் வழங்கப்பட்டது, விளையாட்டு வீரர்களுக்கு சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இதில் 32-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் ஜெயா கணேசன் முன்னிலை வகித்தார், இதயம் முரளி தலைமை தாங்கினார், சிறப்பு அழைப்பாளராக அம்பிகா கல்வி அறக்கட்டளையின் நிறுவனர் சந்திரா ரவிந்திரன் கலந்து கொண்டார், மற்றும் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாவட்ட துணைத் தலைவர் ரகுமான், சமூக ஆர்வலர்கள் கலியமுத்து, தனபாலகிருஷ்ணன், பழனி, தினகரன், கலைவாணன், ஜெகன், மற்றும் பகுதி இளைஞர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கலவர பூமியான சூடான் விமான நிலையத்தைக் கைப்பற்றிய துணை ராணுவப் படை இந்தியர்களுக்கு எச்சரிக்கை



கர்த்தூம் ,ஏப்.16–

சூடானில் ராணுவ ஆட்சிக்கு எதிராக அதிருப்தி தெரிவித்து வந்த துணை ராணுவப் படையினர் அந்நாட்டின் தலைநகர் கர்த்தூமில் உள்ள விமான நிலையத்தை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.இதனால் அங்கு ராணுவத்துக்கும் துணை ராணுவப் படையினருக்கும்இடையே மோதல் வலுத்துள்ளது.

சூடான் நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் ராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்குராணுவ ஆட்சிக்கு எதிராக பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் செயல்படுகின்றன. அதுமட்டுமல்லாது ராணுவத்தின் ஒரு பிரிவான பலம் பொருந்திய துணை ராணுவப் படையான ஆர்எஸ்எஃப் (Rapid Support Forces) என்ற பிரிவும்ராணுவ ஆட்சிக்கு எதிராக இயங்கிவந்தது.

இந்நிலையில், சூடான் நாட்டின் கர்த்தூம் விமான நிலையத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டதாக துணை ராணுவப் படை தெரிவித்துள்ளது. இதனையடுத்து சூடானில் ராணுவத்துக்கும், துணை ராணுவத்துக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நிலவி வருகிறது. நாடு முழுவதும் கலவரம் பரவத்தொடங்கியுள்ளது. இதற்கிடையில் ராணுவம் நாட்டைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக தெரிவித்துள்ளது.

வடகிழக்கு ஆப்பிரிக்கா நாடான சூடானில் கடந்த 2003-ம் ஆண்டு முதல் டார்ஃபூர் மாகாணத்தை மையமாக கொண்டு உள்நாட்டு போர் நிலவி வந்தது. இந்த நிலையில் 2019-ம் ஆண்டு அந்த நாட்டின் அதிபர் ஓமர் அல்-பஷீர் நடத்திவந்த சர்வாதிகார ஆட்சி மக்கள் போராட்டத்தால் அகற்றப்பட்டது. இதன்பின் புதிய அரசை அமைப்பதற்கான ஜனநாயக ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. இந்தநிலையில், ராணுவம் நாட்டைக்கைப்பற்றியது. இதனால் சூடான் ராணுவத்துக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. இதில் இதுவரை ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## இந்தியர்களுக்கு எச்சரிக்கை

இதற்கிடையே, சூடானில் உள்ள இந்திய துணை தூதரகம் அங்கு வசிக்கும் இந்தியர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதன்படி, சூடானில் துப்பாக்கிச் சூடும், கலவரமும் நடப்பதால் அங்கிருக்கும் இந்தியர்கள் அனைவரும் பாதுகாப்பாக வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். வீட்டை விட்டு யாரும் வெளியே செல்ல வேண்டாம் என்று உடனடியாக அறிவுறுத்தப்படுகிறார்கள். அமைதியாக இருங்கள். அடுத்த தகவலுக்கு காத்திருங்கள் என்று தெரிவித்துள்ளது.

# சட்டமேதை அம்பேத்கரின் 133 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன



தாம்பரம், ஏப். 16 - தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட நாகல்கேணி பகுதியில் டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கர் 133 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விலையில்லா வேட்டி, சேலை வழங்குதல் மற்றும் பள்ளி மாணவ, மாணவியருக்கு நோட்டு புத்தகம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் அஇஅதிமுக கே.முனுசாமி பம்மல் பகுதி தெற்கு அவைத் தலைவர் தலைமை தாங்கினார். டாக்டர் அம்பேத்கர் கிராம பொது நல சங்கம் நிர்வாகிகள் தலைவர் வாசுதேவன், செயலாளர் சிரஞ்சீவி, பொருளாளர் ராஜேஷ், துணை பொது செயலாளர் குபேந்திரன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

அண்ணலின் சிலைக்கு அப்பு என்கிற வெங்கடேசன் பம்மல் பகுதிசெயலாளர் மாலை அணிவித்தார். விலையில்லா வேட்டி சேலையை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பதன்சிங் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அனிஷ் குமார் 12வது வார்டு கிழக்கு வட்டச் செயலாளர், மோகன் ராஜா 12 வது வார்டு மேற்கு வட்டச் செயலாளர் மற்றும் ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்ட சி.எஸ்.சி., வி.எல்.இ நல சங்கம் சார்பில் மத்திய, மாநிலங்களின் சேவை மற்றும் நலத்திட்டங்களை விளக்கும் வகையில் மயிலாடுதுறை ஒய்வூதிய சங்க அலுவலகத்தில் கலந்தாய்வு பயிற்சி கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட பொது சேவை மைய மேலாளர் பிரபாகரன் தலைமை தாங்கினார். மாவட்ட பொது சேவை மைய தலைவர் சம்பத், பொருளாளர், செயலாளர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பாளர்கள் மணிமாறன், சீனிவாசன், மணிகண்டன், அறிவுடைநம்பி, மணிபாரதி, முகமது இம்கியாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# காரைக்கால் மாவட்ட ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் பங்கேற்பு



காரைக்கால்,ஏப்.16 காரைக்கால் மாவட்ட ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக துறை சார்ந்து செயல்படுத்தப்படும் SC/ST நலத்திட்ட பணிகள் குறித்து ஆலோசனை மற்றும் கருத்து கேட்பு கூட்டம் காரைக்காலில் நடைபெற்றது. சில தினங்களுக்கு முன்பு புதுவையில் இதுபோன்ற அமைப்புகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது.

காரைக்காலில் உள்ள பல்வேறு சங்கங்களின் வேண்டுகோளை ஏற்று போக்குவரத்து மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் தசந்திர பிரியங்கா உத்தரவின் பேரில் காரைக்காலில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு போக்குவரத்து மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமை வகித்தார். மேலும் முன்னாள் மாவட்ட ஆட்சியரும் இத்துறையின் செயலாளருமான கேசவன் மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் த குலோத்துங்கன் ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் இளங்கோவன் மற்றும் பேட்கோ மேலாண் இயக்குனர் துறையின் உதவி இயக்குனர் மற்றும் பல்வேறு சங்கப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அனைத்து சங்க பிரதிநிதிகள் தலைவர்களுக்கு தங்கள் கருத்துக்களை கூற அனுமதி அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தலைவர்கள் பேசினார்கள். அவர்கள் அரசுக்கு வைத்த கோரிக்கையில் முக்கியமான கோரிக்கையாக காரைக்காலில் அமைந்துள்ள முக்கிய தலைவர்களின் சிலைகளுக்கு குடை அமைத்து தர வேண்டும். காரைக்காலில் அம்பேத்கர் மணிமண்டபம் அமைக்க வேண்டும் எனவும் ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் இயங்கும் மாணவர்கள் தங்கும் விடுதிகளை மேம்படுத்த வேண்டும் .மாணவர்களுக்கு தரமான உணவு விடுதிகல் வழங்க வேண்டும் . மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் எனவும் வீடு கட்டும் நிதியை உயர்த்தி வழங்க வேண்டும் . தலித் கிராமங்களுக்கு சிமெண்ட் சாலை, விளையாட்டு பூங்கா, நூலகம். ஆகியவை அமைத்து தர வேண்டும் , அனைத்து கிராமங்களிலும் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தை மேம்படுத்த வேண்டும் , சிறப்பு கூறு. நிதியை SC/ST மக்களுக்காக மட்டும் பயன்படுத்த வேண்டும் , அனைத்து விடுதிகளிலும் நூலகம் அமைக்க வேண்டும், இடுகாட்டிற்கு அருகே அமைந்துள்ள குடியிருப்புகளை மாற்றித் தரவேண்டும் எனவும் கிராமப்புறங்களில் சாலை வசதிகளை மேம்படுத்தித் தர வேண்டும் , மேலும் காரைக்காலில் அமைந்துள்ள உள் விளையாட்டு அரங்கத்திற்கு டாக்டர் அம்பேத்கர் பெயர்களை சூட்ட வேண்டும்,ஈமச்சடங்கு நிதியை உடனே அளிக்க கோரிக்கை வைத்தார்கள், மேலும் மானிட்டரிங் கமிட்டி அமைக்க வேண்டும் , கோயில்பத்தில் இயங்கி வந்த மாணவர்கள் தங்கும் விடுதியை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் , அரசிற்கு பல்வேறு சங்கங்களின் தலைவர்கள் கோரிக்கை வைத்தார்கள்.

இந்நிகழ்வில் பேசிய காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறுகையில் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்த அனைத்து கோரிக்கைகளையும் மாவட்ட நிர்வாகம் கண்டிப்பாக நிறைவேற்றும் என மாவட்ட ஆட்சியர் உறுதி அளித்தார். இந்நிகழ்வில் பேசிய போக்குவரத்து மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கூறுகையில் இந்தியாவிற்கே தெய்வமாக விளங்கிய தேசத் தலைவர் டாக்டர் அம்பேத்கரின் பிறந்தநாளில் இந்நிகழ்வில் கலந்துகொள்வதில் பெருமையாக உள்ளது என்றும் நம் சமுதாய மக்களின் வளர்ச்சிக்காக இந்த அரசு பாடுபடும் என தெரிவித்தார்

# திமுக சார்பில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி எம்எல்ஏ நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டார்



தரங்கம்பாடி, ஏப். 15 - இஸ்லாமியர்கள் ரம்ஜான் பண்டிகையை ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாதம் உண்ணாமல் நோன்பிருந்து கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் இந்த ஆண்டு கடந்த 24 ஆம் தேதி ரம்ஜான் நோன்பு தொடங்கியது. மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் எம்.அப்துல்மாலிக் ஏற்பாட்டில் திருக்களாச்சேரி ஊராட்சி தனியார் திருமண மண்டபத்தில் மும்மதத்தினரும் சேர்ந்து ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு இப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன் கலந்து கொண்டு இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் ஆகியோர் கலந்து கொண்டு நோன்பு கஞ்சி சாப்பிட்டு நோன்பு திறந்தனர்.

இதில் தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் உமாமகேஸ்வரி சங்கர், செம்பை ஒன்றிய பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர், மாவட்ட துணை செயலாளர் ஞானவேலன், ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், அமுர்த விஜயகுமார், ராஜா, வைத்தியநாதன், தரங்கைப் பேரூர் கழக செயலாளர் முத்துராஜா மற்றும் தரங்கம்பாடி கத்தோலிக்க திருச்சபை பங்குத்தந்தை அருளானந்து, தலைவர்கள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மதகடி அந்தோணியார் தெருவில் உள்ள இளைஞர்களும் பொதுமக்களும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 132 வது பிறந்தநாள் விழாவினை விமல் நற்பணி மன்றம் கொண்டாடியது விழாவில் ஏராளமான பொதுமக்களும் இளைஞர்களும் திரளாக கலந்து கொண்டனர் அதனை தொடர்ந்து காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது விழாவினை விமல் நற்பணி மன்ற பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும் செய்திருந்தனர்.



திருவொற்றியூரில் அதிமுக சார்பில் 18 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தலை முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் மற்றும் மாதவரம் மூர்த்தி திறந்து வைத்தார் ஏழை எளியவர்களுக்கு இளநீர் குளிர்பானங்கள் வழங்கினர். நிகழ்ச்சியில் பி.ராஜேந்திரன் அஜாக்ஸ் எஸ் பரமசிவம் ஜி ரவிக்குமார், தீனன் முரளி மாரி பிரகாஷ் சூரியபாபு பரீத், கார்த்திக் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி விருது வழங்கும் விழா. எம்எல்ஏ பனையூர் பாபு பங்கேற்பு



செங்கல்பட்டு, ஏப். 16 - செங்கல்பட்டு மாவட்டம், இலத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட சீவாடி ஊராட்சியில் இரண்டாவது ஆண்டாக வி-ஆர்மீடியா தமிழ் யூ டியூப் சேனல் நடத்திய அம்பேத்கர் பிறந்தநாளை ஒட்டி நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் மு.பாபு கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.

இதில் சிறந்த கல்வியாளருக்கான சாவித்திரிபாய்பூலே விருது ஆசிரியர் ஆனந்த பாபு, சிறந்த மாணவர்களுக்கான ரோஹித் வெமுலா விருது ஹரிகரன், நீட் போராளி அனிதா விருதுகாவியா ஆகியோருக்கும், சிறந்த கலைஞருக்கான மக்கள் மன்ற தோழர் செங்கொடி விருது சாய்ஸ்ரீ மற்றும் நிஷாந்த் ஆகியோருக்கும் வழங்கப்பட்டது.

செய்யூர் தொகுதிக்குட்பட்ட சீவாடி கிராமத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அண்ணல் அம்பேத்கர் இளைஞர் குழுவின் மன்ற பலகையும் திறந்து வைத்தார். மேலும் பேராசிரியர் சீ.வே. கார்த்திக் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற நிகழ்வில் அரசு சிறப்புவழக்கறிஞர் சசிரேகாஸ்ரீதர், பனையூர் பாபு பவுண்டேஷனை சார்ந்த விஜய் பாபு மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் கிராமத்து இளைஞர்களும் பெரிய அளவில் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்டம் திருபட்டினம் நடுகளம் அரசு தொடக்கப்பள்ளியில் 50-ஆம் ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு,நடைபெற்ற ஆண்டு விழாவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகதியாகராஜன் கலந்து கொண்டு மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளை கண்டுகளித்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் சிறப்புரையாற்றி பள்ளி விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி அவர்களை ஊக்குவித்தார். இந்நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மேடு அரசு மகளிர் தொழில்நுட்ப கல்லூரியில் நேற்று கல்லூரி ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா மற்றும் கல்லூரி முதல்வர் சந்தனசாமி மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் மேலும் காரைக்கால் மேடு கிராம பஞ்சாயத்தார்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இவ்விழாவில் அமைச்சர், 30 மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகளும் மற்றும் மாணவிகளுக்கு பரிசுகளும் வழங்கினார். மேலும் மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புரையாற்றினார். பெண்கள் எல்லா துறைகளிலும் பணியாற்ற வேண்டும் என்றும் பெண்கள் எல்லா துறையிலும் இருக்கிறார்கள். பெண்கள் இல்லாமல் எந்த துறையும் இயங்காத நிலையை நாம் உருவாக்க வேண்டும் என்றும் பெண்கள் பொருளாதார ரீதியாக யாரையும் சார்ந்து இருக்கக் கூடாது என்றும் கூறினார். பெண்கள் வெளி உலகத்தை அறிந்திருக்க வேண்டும் ஆதலால் பெண்கள் வெளிமாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கு சென்று பணியாற்ற வேண்டும் என்று கூறினார்.

# புரட்சி பாரதம் கட்சி சார்பில் அம்பேத்கரின் 133-வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது



திருவள்ளூர், ஏப். 16 - திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கரின் 132-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய பொருளாளர் அழிஞ்சிவாக்கம் பிரகாஷ்ராவ் தலைமை தாங்கினார். அழிஞ்சிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் கே.சுதாகர் கட்சி கொடியை ஏற்றி வைத்து, அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதன் பின்னர், வீட்டின் சுவரில் தத்ரூபமாக வரையப்பட்ட அம்பேத்காரின் திருவுருவ படத்துக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினர்.

நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில், மாவட்டத் துணைச் செயலாளர்கள் வெங்கல் சி.பிரம்மா, மாவட்டத் துணைத் தலைவர் பிடி. சி.முனிவேல், ஒன்றிய தலைவர் குமன்ராஜ், ஒன்றிய செயலாளர் இளையராஜா, ஒன்றிய துணைச் செயலாளர்கள் திராவிடலாசர், வெங்கல் வேலு, இ.மேகநாதன், ஜி.முருகன், ஆர்.சம்பத், வார்டு உறுப்பினர் கே.கதிர்வேல், கிளை தலைவர் ஜி.முருகன், கிளை பொருளாளர் ஆர்.சம்பத் மற்றும் ஹரிபாபு, பாலாஜி, பிரசாத், தமிழ், அசோக், சிலம்பு, சதீஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை புரட்சி பாரதம் கட்சியின் எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# அறந்தாங்கியில் அம்பேத்கர் சமூக நல அறக்கட்டளை சார்பில் கருத்தரங்கம்



அறந்தாங்கி, ஏப்.16- புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தனியார் திருமண மண்டபத்தில் டாக்டர் அம்பேத்கர் 133-வது பிறந்த நாளை முன்னிட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்குசரவண முத்து தலைமை தாங்கினார், டாக்டர் அம்பேத்கர் சமூக நல அறக்கட்டளை தலைவர்,கண்ணதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார், அறக்கட்டளை செயல்திட்ட விளக்க உரையை தொல்காப்பியன் நிகழ்த்தினார்,நிகழ்ச்சியில் சமத்துவ மின்மையின் தோற்றம் பற்றி புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ராஜ்வர்தனன் சமத்துவமின்மையின் தோற்றம் என்ற தலைப்பில் பேசினார்.

திருச்சி ஆரோக்கியா மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மருத்துவர் பெரியசாமி சாக்கியா அம்பேத்கரும் கல்வியும் என்ற தலைப்பில் பேசினார், விசிக புதுக்கோட்டை மாவட்ட துணை செயலாளர் திலீபன் ராஜா அம்பேத்கரும் அரசியலும் என்ற தலைப்பிலும்,ஐன்ஸ்டீன் ஹக்கிங் அறிவியல் மன்றம் கலைச்செல்வன் வானம் வசப்படும் என்ற தலைப்பிலும், புதுக்கோட்டை அரசு ஊழியர் ஐக்கிய பேரவை மாவட்டத் தலைவர் தவப்புதல்வன் சசிகுமார் அம்பேத்கரின் இன்றைய தேவை என்ற தலைப்புகளிலும் பேசினர்.

நிகழ்ச்சியில் அம்பேத்கருடைய வாழ்க்கை வரலாறு மற்றும் அவர் ஆற்றிய பங்கு உள்ளிட்டவை அரங்கத்தில் பேசப்பட்டது, நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், அறந்தாங்கி தொகுதி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட குமார் நூறு நபர்களுக்கு அவர்களை பாராட்டி விருதுகளும் வழங்கப்பட்டது.

# ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முப்பெரும் விழா டி.ஜே.கோவிந்தராஜன் எம்எல்ஏ பங்கேற்பு

ஊத்துக்கோட்டை, ஏப். 16 - திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஊத்துக்கோட்டை காவல் நிலையம் எதிரே ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி உள்ளது. இப்பள்ளியில் முப்பெரும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

பள்ளி துவங்கி 125 ஆண்டுகள் நிறைவு விழா, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்களின் படங்கள் திறந்து வைக்கும் நிகழ்ச்சி, பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் பள்ளிக்கு சீர்வரிசை பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி என முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் கதிரவன் தலைமை தாங்கினார். எம்.யுவந்தி, அப்துல்பரீத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு கே.கணேஷ்குமார், முன்னாள் தலைமை ஆசிரியர் என். திருத்தணி, ஊத்துக்கோட்டை பேரூராட்சி மன்ற தலைவர் எ.அப்துல்ரஷீத், துணைத் தலைவர் கே.ஆர்.குமரவேலு, முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் கே.அபிராமி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினர்.

சிறப்பு அழைப்பாளராக கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கல்வி நெறி காவலர் டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு தனது சொந்த செலவில் ரூ.2 லட்சம் செலவில் கட்டிக்கொடுத்த பள்ளியின் 125-வது ஆண்டு நிறைவு நினைவு நுழைவாயிலை திறந்து வைத்தார்.




இதன் பின்னர், பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் கொண்டு வரப்பட்ட சீர்வரிசை பொருட்களை பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சியும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சி, மாணவர்கள் இடையே உயர்வு - தாழ்வு மனப்பான்மையை போக்கும் வகையில் அன்பு பெட்டகம் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது.

அப்போது பேசிய சட்டமன்ற உறுப்பினர் கல்வியின் அவசியத்தையும், கல்வி கற்றால் மனிதன் உயர்ந்த நிலைக்கு செல்லலாம். பிச்சை எடுத்தாவது கல்வி கற்க வேண்டும், கல்வி கற்றால் தன்னம்பிக்கையோடும், தனது சொந்த காலில் நிற்கலாம். வாழலாம், கல்வி கொடுக்க, கொடுக்க வளரும். அதனை யாராலும் திருட முடியாது என்றும், கல்வி கற்காதவர்கள் முகத்தில் இருப்பது இரண்டு புண்கள் என்று திருவள்ளுவர் கூறிய அனைத்தையும் விளக்கிக் கூறினார்.

இதன் பின்னர், சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கு நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பள்ளி வளாகத்தில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

முன்னதாக அனைவரையும் உதவி ஆசிரியர் புவராணி, மோகனாதேவி ஆகியோர் வரவேற்றனர். முடிவில் உதவி ஆசிரியர்கள் ஹரிதா, ஹேமலதா ஆகியோர் நன்றி கூறினர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பெற்றோர் ஆசிரியர் கழகம், எஸ். எம்.சி குழு, முன்னாள் பள்ளி மாணவர்கள், கிராம பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இணைந்து செய்திருந்தனர்.

# கந்தர்வகோட்டை அருகே புனல் குளத்தில் குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி ஆண்டு விழா




கந்தர்வகோட்டை,ஏப்.16–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே புனல்குளத்தில் அமைந்துள்ள குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மகளிர் கல்லூரியில் கல்லூரி ஆண்டு விழாவானது வெகு சிறப்பாக நடைபெற்றது, தமிழ் தாய் வாழ்த்தை தொடர்ந்து ஒருங்கிணைப்பாளர் மற்றும் கணிதத்துறை உதவி பேராசிரியர் என். பாலாம்பிகை வரவேற்பு உரையாற்றினார், கணினி அறிவியல் துணைத் தலைவர் ஆர்.சுஜாதா அறிமுக உரையாற்றினார், கல்லூரி முதல்வர் எம்.சித்ரா ஆண்டரிக்கை வாசித்தார், கல்லூரி செயலாளர் ஆர் ராஜேந்திரன் தலைமை உரையாற்றினார்.

கிங்ஸ் கல்லூரி முதல்வர் ஜெய அற்புத விஜய செல்வி வாழ்த்துரை வழங்குகையில், கல்லூரியின் ஐந்தாண்டு கால வளர்ச்சியையும் பெருமிதத்தையும் கூறினார், விழாவின் சிறப்பு விருந்தினராக தஞ்சை மாநகராட்சியின் துணை மேயர் அஞ்சுகம் பூபதி பேசுகையில், வாழ்நாளில் பெண்கள் பெறக்கூடிய அணிகலன் கல்வி என்றும் தாய் தந்தையருக்கு நன்றி கடன் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் தொழில் நிறுவனம் அமைத்து வருமானம் ஈட்டுவதை விட மாணவர்களுக்கு கல்வி வழங்குவது சமுதாயம் சார்ந்த சிந்தனை என்ற தனது கருத்தை மாணவிகள் முன் அறிவுரையாக சமர்ப்பித்தார், கல்வியில் முதலிடம் வகித்துக் கொண்டிருக்கும் மூன்றாம் ஆண்டு கணினி அறிவியல் துறை மாணவி எஸ்.திவ்யா–வுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது, மேலும் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகளுக்கு கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, பாமா மற்றும் உதவி பேராசிரியர் ஹேமலதா ஆகியோர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர்.

# தென்காசி மாவட்ட காங்கிரஸ் சார்பில் அம்பேத்கர் பிறந்தநாள் விழா



தென்காசி, ஏப்.16–

டாக்டர் அம்பேத்கர் பிறந்த தினத்தை முன்னிட்டு தென்காசி அருகே உள்ள நன்னகரத்தில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் முழு உருவ சிலைக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாவட்டத் தலைவர் எஸ் பழனி நாடார் எம் எல் ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் நகர தலைவர்கள் மாடசாமி ஜோதிடர், பால்ராஜ், அபுதாஹீர் மாநில நிர்வாக குழு உறுப்பினர் மருத்துவர் சங்கரகுமார், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் சட்டநாதன், கணேசன், ஜேம்ஸ் மாவட்ட பொதுச் செயலாளர்கள் கணேசன், காஜா மைதீன், மாவட்ட பஞ்சாயத்துதுணைத்தலைவர் உதய கிருஷ்ணன், வட்டாரத் தலைவர்கள் பெருமாள், ஏபிடி மகேந்திரன், இளைஞர் காங்கிரஸ் சந்தோஷ், ரயில்வே செல்லத்துரை, கண்ணன், கதிரவன், ஈஸ்வரன், தேவராஜன், சலீம், சபரி முருகேசன், கந்தையா, லட்சுமணன், கவுன்சிலர்கள் சுப்பிரமணியன், ரபீக், ஐ என் டி யு சி மாநில துணைச் செயலாளர் ரவி, மாவட்டச் செயலாளர்கள் மாடசாமி, ரபீக் வழக்கறிஞர் முருகையா பாண்டியன், சர்புதீன், மஸ்தான், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை அருகே அரவம்பட்டியில் உயர் மின் அழுத்த கோபுரத்தில் பழுது பார்த்துக் கொண்டிருந்த ஒப்பந்த தொழிலாளி மின்சாரம் தாக்கி பலி



கந்தர்வகோட்டை,ஏப்.16–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகில் உள்ள அரவம்பட்டி கிராமத்தில் உயர் மின் அழுத்த கோபுரத்தில் உள்ள பழுதுகளை பார்ப்பதற்காக திருப்பத்தூர் மாவட்டம் கந்தளி தாலுக்கா சின்ன கந்தலி கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி மகன் சுப்பிரமணி (40) என்பவர் உயர் அழுத்த மின் கோபுரத்தின் மீது ஏறி பழுது பார்த்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக இவர் மீது மின்சாரம் பாய்ந்து கோபுரத்தின் உச்சியில் இருந்து கீழே விழுந்துசம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தங்கி அங்கிருந்து உயர் மின் அழுத்த கோபுரங்களில் உள்ள பழுதுகளை சரி செய்து வந்தனர், இந்த ஒப்பந்தத்தின் தலைமையிடமாக குஜராத் மாநிலம்அசோசியேட்ஸ்பவர் ஸ்ட்ரக்சர் என்ற நிறுவனத்தின் மூலம் பணிபுரிந்து வந்தனர், இறந்த சுப்பிரமணியனுக்கு மூன்று குழந்தைகள் மற்றும் மனைவியும் உள்ளனர், உயர் மின்னழுத்த கோபுரத்திலிருந்து மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் குறித்து அரவம்பட்டி பகுதி பொதுமக்கள் கந்தர்வகோட்டை காவல்துறைக்கு அளித்த தகவலின் பெயரில் சம்பவ இடத்திற்கு வந்த உதவி ஆய்வாளர் கேசவ மூர்த்தி மற்றும் மார்ட்டின் ராஜ் ஆகியோர் இறந்தவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்கு பதிவு செய்து மேல் விசாரணை செய்து வருகின்றனர்.

# ஒகேனக்கல் சுற்றுலா தலத்தில் பரிசல் பயணத்துக்கு கூடுதல் கட்டணம் கேட்பதால் வாக்குவாதம்



தருமபுரி ,ஏப்.16–

ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தில் அரசு விதிகளை மீறி பரிசல் பயணத்துக்கு கூடுதல் கட்டணம் கேட்டதால் சுற்றுலாப் பயணிகளுக்கும், பரிசல் ஓட்டிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் தாலுகா கூத்தப்பாடி ஊராட்சியில் காவிரியாற்றங்கரையில் ஒகேனக்கல் சுற்றுலாத் தலம் அமைந்துள்ளது. எண்ணெய் மசாஜ், அருவி மற்றும் ஆற்றில் குளித்தல், பரிசல் பயணம் போன்றவை ஒகேனக்கல் சுற்றுலாவில் முக்கிய இடம் வகிக்கும் அம்சங்களாகும்.

இதற்காக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமின்றி கர்நாடகா, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்கள், வெளி நாடுகளில் இருந்தும் ஒகேனக்கல்லுக்கு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

ஒகேனக்கல்லில் 400–க்கும் மேற்பட்ட பரிசல் ஓட்டிகள் உள்ளனர். பரிசல் இயக்கம் உள்ளாட்சி அமைப்பு மூலம் தனியார் வசம் ஒப்பந்தம் வழங்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. ஒப்பந்த விதிப்படி பரிசல் பயணத்துக்கு வசூலிக்கப்பட வேண்டிய கட்டணமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு பரிசலில் 5 நபர்கள் வரை மட்டுமே பயணிக்க முடியும். ஒரு நபருக்கு ரூ.750 கட்டணம் செலுத்த வேண்டும். இதில், ரூ.600 பரிசல் ஓட்டுநருக்கான கூலி, ரூ.90 பராமரிப்புக் கட்டணம், ரூ.60 உயிர் காக்கும் சட்டைக்கான (லைஃப் ஜாக்கெட்) கட்டணம் ஆகியவை அடங்கும். ஆனால், பரிசல் ஓட்டிகளில் பெரும்பாலானவர்கள் சுற்றுலாப் பயணிகளிடம் கூடுதலாக பணம் கேட்டு தொல்லை தருவதாக புகார் எழுந்துள்ளது.

நேற்று முன்தினம் கர்நாடகாவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளிடம், அறிவிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் கேட்டதால் பரிசல் துறையில் வாக்குவாதம் ஏற்பட்டது. போலீஸார் வந்த பிறகே பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்த வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

சுற்றுலாப் பயணிகள் சிலர் கூறும்போது, ‘45 நிமிட பரிசல் பயணத்துக்கு ஒரு நபருக்கு ரூ.750 என அரசு நிர்ணயம் செய்துள்ள கட்டணத்தை செலுத்திய பிறகும் ஒரு பரிசலுக்கு ரூ.2,000 முதல் ரூ.3,000 வரை கூடுதல் கட்டணம் கேட்டு பரிசல் ஓட்டிகள் பிரச்சினை செய்கின்றனர். கூடுதல் பணம் தர ஒப்புக்கொள்ளாவிட்டால், கட்டணம் செலுத்தியிருந்தாலும் கூட அவர்களை பரிசலில் ஏற்றிச் செல்ல முன்வருவதில்லை. இதன்மூலம் சுற்றுலாவுக்காக ஒகேனக்கல்லுக்கு வரவே கூடாது என்ற மனநிலை தான் ஏற்படுகிறது’ என்றனர்.

இது தொடர்பாக பென்னாகரம் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெகதீஷ்வரனிடம் பேசியபோது, ‘ஒரு வாரம் முன்பே ஒகேனக்கல்லில் இந்த பிரச்சினை தொடர்பாக புகார் வந்தது. ஒருசில பரிசல் ஓட்டிகள் இவ்வாறு நடப்பதாக தெரிகிறது. ஒகேனக்கல்லில் பரிசல் ஓட்டிகள் சார்பில் 4 சங்கங்கள் உள்ளன.

அதன் நிர்வாகிகளிடம் இதுகுறித்து பேசியபோது, தீர்வு ஏற்படுத்த ஒருவார காலம் அவகாசம் கேட்டுள்ளனர். ஓரிரு நாட்களில் ஒகேனக்கல்லில் அரசு சார்பில் ஒரு விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட உள்ளது. அதன்பிறகும் கட்டண விவகாரத்தில் பரிசல் ஓட்டிகள் விதிகளை மீறினால் அவர்களின் உரிமம் ரத்து செய்யப்படும்’ என்றார்.

ராகுல் காந்தி எம்.பி. பதவி பறித்ததை கண்டித்து எழும்பூர் ரயில் நிலையத்தில்

# மத்திய சென்னை ஓபிசி பிரிவு சார்பில் ஏராளமானோர் போராட்டம்



சென்னை, ஏப். 16 –

அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியின் எம்.பி பதவியை தகுதி நீக்கம் செய்ததையும், அவர் பயன்படுத்தி வந்த அரசு இல்லத்தை பறித்து ஜனநாயக படுகொலை செய்த மோடி தலைமையிலான பாஜக அரசை கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் மாநில தலைவர் கே.எஸ். அழகிரி தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

இந்தபோராட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளர் கே. சிரஞ்சீவி முன்னிலையில், ஓ.பி.சி பிரிவு தலைவர் டி.ஏ.நவீன் தலைமையிலும், மத்திய சென்னை கிழக்கு மாவட்ட தலைவர் (ஓ.பி.சி பிரிவு) எஸ். ராமு முன்னிலையிலும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஓ.பி.சி பிரிவு பொதுச்செயலாளர்கள் பட்டு எல்.கிரி பாபு, சி.வி.திருமலை, எம்.குபேந்திரன், வி.பி.வேலு மற்றும் பகுதி தலைவர்கள் துறைமுகம் பாலாஜி, ஆயிரம் விளக்கு நிர்மல் குமார், திருவல்லிக்கேணி சேப்பாக்கம் சட்டமன்றத் தலைவர் சையத் சாகில், சக்திவேல், பி.ஏ.கிரி மற்றும் மாநில நிர்வாகிகள், ஏராளமான காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் பங்கேற்றனர்.



தீயணைப்பு மீட்பு பணித்துறையில் பணி புரியும் போது தன்னுயிரையும் துச்சம் என மதித்து பணிபுரிந்து தன் உயிரை இழந்த 66 வீரர்களுக்கு நினைவு கூறும் வகையில் திருமயம் தீயணைப்பு மீட்பு பணி நிலையத்தில் நிலைய அலுவலர் தியாகராஜன் தலைமையில் நீத்தார் நினைவு தூண் அமைத்து மலர் வளையம் வைத்து ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 14ஆம் தேதி இந்நிகழ்வு அனுசரிக்கப்பட்டு ஒரு வார காலம் தீ தொண்டு வாரமாக பொதுமக்களுக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் தொழிற்சாலை பணியாளர்களுக்கும் தீ பாதுகாப்பு தீ தடுப்பு முன்னேற்பாடு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் மற்றும் தீயணைக்கும் செயல்முறை விளக்கம் செய்து பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது என்று நிலைய அலுவலர் தியாகராஜன் தெரிவித்தார்.

# ஜெகதாபட்டினம் மீனவ கிராமத்தில் தமிழ்நாடு மீனவர்நல பாதுகாப்பு மாநாடு அமைச்சர்கள் மற்றும் திராவிட கழகத் தலைவர் கி. வீரமணி பங்கேற்பு



புதுக்கோட்டை,ஏப்.16–

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் ஜெகதாபட்டினம் மீனவ கிராமத்தில் தமிழ்நாடு மீனவர் நல பாதுகாப்பு மாநாடு திராவிட கழக தலைவர் கி. வீரமணி தலைமையில் நடைபெற்றது, இதில் கால்நடை மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன், ராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, நாகப்பட்டினம் திமுக மாவட்டச் செயலாளர் கவுதமன் மற்றும் மணமேல்குடி ஒன்றிய பெருந்தலைவர் பரணி கார்த்திகேயன், மணிமேல்குடி ஒன்றிய செயலாளர்கள் சீனியர், சக்தி ராமசாமி. ஆவுடையார்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர் பொன் துரை, ஒன்றிய குழு உறுப்பினர் முத்துக்குமார் மற்றும் மாவட்ட ஒன்றிய கிளைக் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி கூறுகையில், நான் பலமுறை பாராளுமன்றத்தில் மீனவர்களுக்கான உரிமையை பற்றி பேசினேன் ஆனால் ஒன்றிய அரசு அதைப்பற்றி செவி சாய்ப்பது இல்லை என்று கூறினார் அதன் பிறகு பேசிய சுற்றுச்சூழல் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் இந்த ஜெகதா பட்டினத்தில் துறைமுகம் ஒன்று அமைக்க வேண்டும் என்று மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனிடம் கோரிக்கை வைத்தார், அதன் பிறகு பேசியமீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன்,நிச்சயமாக நான் தமிழக முதல்வரிடம் கலந்து ஆலோசித்து கூடிய விரைவில் ஜெகதபட்டினத்தில் துறைமுகம் அமைக்கப்படும் என்றும் கூறினார் , அதன் பிறகு பேசிய சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி மீனவர்களுக்காக குரல் கொடுப்பது ஒரே அரசு தற்போது ஆளும் திமுக அரசு தான் என்பதை யாரும் மறக்க வேண்டாம் ஒன்றிய அரசுதான் மீனவர்களுக்காக எந்த ஒரு நிதியும் வழங்குவதில்லை என்று கூறினார், அதன் பிறகு பேசிய திராவிட கழக தலைவர் கி வீரமணி கூறுகையில்தமிழக மீனவர்களை வேண்டுமென்றே இலங்கை அரசு கைது செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையான படகுகளையும் சிறைபிடித்து படகுகளை அவர்கள் விடுவதில்லை அதனால் அவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் கூறினார் அதற்கு கூடிய விரைவில் முடிவு கட்டப்படும் என்று கூறினார் மீனவர்களுக்கு என்று ஒரு நலவாரியம் அமைக்கப்பட உள்ளது என்றும் கூறினார், ஆயிரத்திற்கு மேற்பட்டோர்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் மறந்துவிட்டாரா முதல்வர் ஸ்டாலின் டிடிவி தினகரன் கேள்வி



சென்னை ,ஏப்.16–

"தமிழ்நாட்டில் ஒரு மாதத்துக்குள் இரண்டு ஆணவப் படுகொலைகள் நடைபெற்றுள்ள நிலையில், திமுக ஆட்சிக்கு வந்தால் சாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றப்படும் என எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது கூறியதை முதல்வரான பின்னர் மறந்து விட்டாரோ என்று கருதத் தோன்றுகிறது" என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தருமபுரி அருகே தந்தையே மகனை ஆணவ படுகொலை செய்ததாகவும், மருமகளை கொடூரமாக தாக்கியதாகவும் வெளியாகி உள்ள தகவல்கள் அதிர்ச்சியளிக்கின்றன.

தமிழ்நாட்டில் ஒரு மாதத்துக்குள் இரண்டு ஆணவப் படுகொலைகள் நடைபெற்றுள்ள நிலையில், திமுக ஆட்சிக்கு வந்தால் சாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றப்படும் என எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது கூறியதை முதல்வரான பின்னர் மறந்து விட்டாரோ என்று கருதத் தோன்றுகிறது.என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சின்னசேலத்தில் ராகுல்காந்தியின் எம்பி பதவியை தகுதி நீக்கம் செய்ததை எதிர்த்து காங்கிரஸ்கட்சியினர் மாபெரும் ரயில் மறியல் போராட்டம்



கள்ளக்குறிச்சி, ஏப்,16_

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலத்தில் ராகுல்காந்தியின் எம்பி பதவியை தகுதி நீக்கம் செய்த மத்திய அரசை கண்டித்து மாவட்டத் தலைவர் ஜெய்கணேஷ்தலைமையில் மாபெரும் ரயில் மறியல் போராட்டம் சின்னசேலம் ரயில் நிலையத்தில் நடைபெற்றது, அப்பொழுது அவ்வழியாக மங்களூர் சென்று கொண்டிருந்த மங்களூர் எக்ஸ்பிரஸ் ரயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர், அப்பொழுது காவல்துறை கண்காணிப்பாளர் மோகன்ராஜ் தலைமையில், சின்ன சேலம் காவல் நிலைய காவல்துறையினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்தனர்.

இந்த ரயில் மறியல் போராட்டத்தில் முன்னாள் மாவட்டத் தலைவர் இளையராஜா, நகர மன்ற உறுப்பினர் தேவராஜ், மாநில பொதுக்குழு உறுப்பினர் முருகன், இளைஞர் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் மாதேஸ்வரன், சின்ன சேலம் நகரத் தலைவர் ஏழுமலை, தொழிற்சங்க மாவட்டத் தலைவர் இளையபெருமாள், எஸ்சி துறை மாவட்டத் தலைவர் பெரியசாமி, வட்டாரத் தலைவர் முனியப்பன், உளுந்தூர்பேட்டை வட்டாரத் தலைவர் ஷேக்ஜவாத், சேவாதளம் மாவட்டம் தலைவர் மீடியாமுருகன், மணலூர்பேட்டை நகரத் தலைவர் கம்ருதீன், மாவட்ட துணைத் தலைவர் செல்வராஜ், மாநில பொதுச் செயலாளர் சீனிவாசன், கல்வராயன்மலை தலைவர் ராஜேந்திரன், கள்ளக்குறிச்சி மீடியா கார்த்திக் மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தின் மாநில, மாவட்ட, நகர, வட்டார பொறுப்பாளர்கள் உள்பட 500–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# நான் ஊழல்வாதி என்றால், இந்த உலகில் வேறு யாருமே நேர்மையானவர்கள் இல்லை கேஜ்ரிவால் ஆவேசம்

புதுடெல்லி ,ஏப்.16–

"நான் ஊழல்வாதி என்றால், இந்த உலகில் வேறு யாருமே நேர்மையானவர்கள் இல்லை" என்று ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் டெல்லி முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவால் ஆவேசமாகத் தெரிவித்துள்ளார்.

டெல்லி மதுபானக் கொள்கை ஊழல் வழக்கில் முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவாலுக்கு சிபிஐ தரப்பில் சம்மன் அனுப்பப்பட்டுள்ள நிலையில், அவர் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். சிபிஐ சம்மன் அனுப்பப்பட்ட பின்னர் அவர் பத்திரிகையாளர்களை சந்திப்பது இது முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பின்போது அவர் கூறியதாவது: “நான் கைது செய்யப்படலாம் என்று நேற்றிலிருந்தே பாஜக தலைவர்கள் பலரும் கூறுகின்றனர். பாஜக மேலிடம் ஒருவேளை அப்படியான உத்தரவைப் பிறப்பித்திருந்தால் அதை எப்படி சிபிஐ மீறும்? டெல்லி சட்டப்பேரவையில் நான் ஊழலுக்கு எதிராகப் பேசிய தினமே அடுத்த சம்மன் எனக்குத்தான் வருமென்பது எனக்குத் தெரியும்.

மதுபானக் கொள்கையில் ஊழல் நடந்ததாக தொடுக்கப்பட்டுள்ள இந்த வழக்கில் சிபிஐயும், அமலாக்கத் துறையும் எங்களுக்கு எதிராக போலியான சாட்சியங்களை அளித்துள்ளன. ஆனால், உண்மை வேறாக உள்ளது. வழக்கின் முக்கிய சாட்சியம் என்ற பெயரில் ஆம் ஆத்மி கட்சியிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட போன்களில் 5



போன்கள்மட்டுமேசிபிஐவசம் உள்ளன. சில அமலாக்கத் துறையிடமும் உள்ளன. நாங்கள் மற்ற போன்களைப் பற்றி வினவினோம். அதற்கு சரியான பதில் இல்லை. அவற்றை இப்போது யாரோ சிலர் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

சிபிஐவசமோ, அமலாக்கத் துறையிடமோ எந்த உண்மையான ஆதாரங்களும் இல்லை. அதனால், அவர்கள் போலியான சாட்சியங்களைக் கொடுத்துள்ளனர். அதுமட்டுமல்லாமல்விசாரணை என்ற பெயரில் அடித்துத் துன்புறுத்தும் செயல்களும் நடைபெறுகின்றன.

ரூ.100 கோடி ஊழல் நடந்ததாகச் சொல்கின்றனர். ஆனால், எங்கிருந்தாவது ஒரு ரூபாயாவது கைப்பற்றினார்களா? அந்தப் பணத்தை நாங்கள் கோவா தேர்தலில் பயன்படுத்தினோம் என்றும் கூறுகின்றனர். ஆனால் ரெய்டு நடத்தியும் எதுவும் கைப்பற்றப்படவில்லையே. ஒருவேளை நான், “கடந்த டிசம்பர் 17 மாலையில் நரேந்திர மோடிக்கு ரூ.1000 கோடி கொடுத்தேன்” என்று சொன்னால் அதன் அடிப்படையில் அவரைக் கைது செய்ய இயலுமா? கைதுக்கு ஏதாவது சாட்சி வேண்டும்தானே? எங்கள் மீது ரூ.100 கோடி ஊழல் புகார் சொல்பவர்களால் ஏன் ஆதாரங்களைக் கொடுக்க இயலவில்லை.

நாங்கள் பஞ்சாபிலும் இதே முறையிலான கலால் வரிக் கொள்கையைத் தான் பின்பற்றினோம். அங்கே வருவாய் 50 சதவீதம் அதிகரித்துள்ளது.

பிரதமர் மோடியிடம் நான் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் ஊழல்வாதி என்றால், இந்த உலகில் வேறு யாருமே நேர்மையானவர்கள் இல்லை என்றே அர்த்தம். கடந்த 75 ஆண்டுகளில் எந்த ஓர் அரசியல் கட்சியும் இத்தகைய நெருக்கடிகளை சந்தித்திருக்காது. ஏனென்றால், ஆம் ஆத்மி கட்சி மக்களின் மனங்களில் வறுமை ஒழிப்பு, கல்வி போன்ற நம்பிக்கைகளை விதைத்துள்ளது. எங்களைக் குறிவைத்து அந்த நம்பிக்கையை அழிக்க நினைக்கின்றனர்” என்று கேஜ்ரிவால் கூறினார்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# நான் ஊழல்வாதியா? உலகில் வேறு யாருமே நேர்மையானவர்கள் இல்லை

# திமுக தொகுதி பார்வையாளர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல்



# விண்வெளியில் விளைவிக்கப்பட்ட தக்காளி பூமிக்கு வருகிறது நாசா தகவல்


சென்னை / புதுக்கோட்டை | 16.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

16.04.2023 ஞாயிறு

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**கந்துகூரி வீரேசலிங்கம்** , இந்திய எழுத்தாளர், செயற்பாட்டாளர் (பி.1848) (இ.1919)



**பி.ஸ்ரீ.** , தமிழகப் பேச்சாளர், எழுத்தாளர், பதிப்பாசிரியர், வரலாற்று ஆசிரியர் (பி.1886) (இ.1981)



**ராமச்சந்திர தீட்சிதர்** , தமிழக இந்தியவியலாளர், திராவிடவியலாளர் (பி.1896) (இ.1953)



**சார்லி சாப்ளின்** , ஆங்கிலேய நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர் (பி.1889) (இ.1977)



## இன்றைய நினைவு நாள்

**கோ. வா. உலோகநாதன்** , இந்திய-அமெரிக்கப் பொறியியலாளர், கல்வியாளர் (பி.1954) (இ.2007)



**கோயம்புத்தூர் கிருஷ்ணாராவ் பிரகலாத்** , இந்திய-அமெரிக்க மேலாண்மை வல்லுநர் (பி.1941) (இ.2010)



**எல். கே. பி. லகுமையா** , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், காந்தியவாதி (பி.1919) (இ.2013)



## உலகக் குரல் நாள்